செ.வெ.எண்.02 <u>01.06.2020</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நீலகிரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட இனங்களுக்கு மறு உத்தரவு வரும்வரை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப.அவர்கள் தகவல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் செய்திக் குறிப்பு நாள். 31.05.2020 மற்றும் அரசாணை எண்.262, நாள்.31.05.2020 வருவாய் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் மத்திய அரசு உத்தரவின்படி தற்பொழுது உள்ள ஊரடங்கு உத்தரவானது எதிர்வரும் 30.06.2020 நள்ளிரவு 12.00 மணி வரை நீட்டித்து உத்தரவிடப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கீழ்க்கண்ட இனங்களுக்கு மறு உத்தரவு வரும்வரை தடைகள் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

1. வழிபாட்டுத் தலங்களில் பொதுமக்கள் வழிபாடு மற்றும் அனைத்து மதம் சார்ந்த கூட்டங்கள் நடத்த தடை விதிக்கப்படுகிறது.
2. நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகள் நுழைய தடை விதிக்கப்படுகிறது. மேலும், நீலகிரி மாவட்டத்தில் இயங்கி வரும் அனைத்து சுற்றுலாத் தலங்களும் மூடப்பட்டுள்ளது. உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலாப் பயணிகள் தேவையின்றி சுற்றுலாத் தலங்கள் மற்றும் வனப் பகுதியை ஒட்டிய பகுதிகளில் தனியாகவும், குடும்பத்துடனும் சுற்றுவது கண்டறியப்பட்டால் வாகனம் பறிமுதல் செய்யப்படுவதுடன் 144 தடை உத்தரவு சட்டம் மற்றும் பேரிடர் மேலாண்மை சட்ட விதிகளின்படி மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.
3. தங்கும் வசதியுடன் கூடிய விடுதிகள், உணவகங்கள், விருந்தோம்பல் தேவைகள் அனைத்தும் தடை செய்யப்படுகின்றன. இப்பகுதிகளில்

வெளிநபர்கள் யாரேனும் தங்கியிருப்பது கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட விடுதி உரிமையாளர்கள் மீது பேரிடர் மேலாண்மை சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுப்பதுடன் விடுதியும் சீல் செய்யப்படும்.

4. பள்ளி, கல்லூரி, பயிற்சி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களும் மறு உத்தரவு வரும் வரை செயல்பட அனுமதியில்லை. மேலும், இணையவழி கல்வி மூலம் கற்றல் தொடர்வதற்கு ஊக்குவிக்கப்படும்.
5. திரையரங்குகள், உடற்பயிற்சி கூடங்கள், நீச்சல் குளங்கள், கேளிக்கை கூடங்கள், மதுக்கூடங்கள், பெரிய அரங்குககள், கூட்ட அரங்குகள், சுற்றுலாத் தலங்கள், பூங்காங்கள், அருங்காட்சியகங்கள் போன்ற பொதுமக்கள் அதிகளவில் கூடும் இடங்கள் செயல்பட தடை செய்யப்பட்டுள்ளது.
6. அனைத்து வகையான சமுதாய, அரசியல், விளையாட்டு, பொழுது போக்கு, கலாச்சார நிகழ்வுகள், சமய, கல்வி விழாக்கள், கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்களுக்கு அனுமதியில்லை.
7. மாநிலங்கள் மற்றும் மண்டலங்களுக்கிடையேயான போக்குவரத்துக்கு தடை செய்யப்படுகிறது. இப்பகுதிகளுக்குச் செல்ல இ–பாஸ் பெற்றுச் செல்ல வேண்டும்.

நோய்க் கட்டுப்பாட்டு பகுதிகள் தவிர இதரப் பகுதிகளில் கீழ்க்கண்ட சில இனங்களில் மட்டும் சில நிபந்தனைகளுடன் செயல்பட அனுமதிக்கப்படுகிறது. நிபந்தனைகளை மீறுபவர்கள் மீது 144 தடை உத்தரவு மற்றும் பேரிடர் மேலாண்மை சட்ட விதிகளின்படி மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

1. இறுதி ஊர்வலங்கள் மற்றும் அதைத் சார்ந்த சடங்குகளில் 20 நபர்களுக்கு மேல் பங்கேற்கக் கூடாது.
2. திருமண நிகழ்ச்சிகளில் 50 நபர்களுக்கு மேல் பங்கேற்கக் கூடாது.

3. மாவட்டத்தில் பொதுப் போக்குவரத்து இன்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதில், முதல் மண்டலமான நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், கரூர், சேலம் மற்றும் நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு அரசுப் போக்குவரத்து பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், இம்மாவட்டங்களுக்கு தனியார் வாகனங்கள் அரசு விதிமுறைகளின்படி ஓட்டுநர் உள்பட நான்கு நபர்களுக்கு மேல் செல்லக்கூடாது. அனைத்து வகையான போக்குவரத்துகளை பயன்படுத்துபவர்கள் கட்டாயம் முகக்கவசம் அணியப்பட வேண்டும். போதிய சமூக இடைவெளியைப் பின்பற்றி இருக்கைகளில் அமர வேண்டும். விதிமுறைகளை மீறுபவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும்.

4. சோதனைச் சாவடிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும்பட்சத்தில் தேவைக்கேற்ப மாவட்டத்தின் ஒருவழிப்பாதையாக மாற்றி, போக்குவரத்து சரிசெய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

5. நோய்த் தொற்று அறிகுறிகளுடன் மாவட்டத்திற்குள் நுழையும் பயணிகளுக்கு சளி மாதிரி சேகரித்து சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, 14 நாட்களுக்கு அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்தப்படுவர்.

6. அனைத்து தனியார் மற்றும் அரசு தொழில் நிறுவனங்கள் 100 சதவீதப் பணியாளர்களுடன் இயங்க அனுமதி அளிக்கப்படுகிறது.

7. வாடிக்கையாளர்கள் கடைக்குள் அனுமதிக்கப்படும் பொழுது, தகுந்த சமூக இடைவெளியை கடைப்பிடிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும் குளிர்சாதன வசதியை பயன்படுத்தக் கூடாது.

8. வாடகை மற்றும் டாக்ஸி வாகனங்கள் ஓட்டுநர் தவிர்த்து மூன்று பயணிகளுடன் இயக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

9. ஆட்டோக்களில் இருவர் மட்டும் பயணிக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

அத்தியாவசியத் தேவையின்றி சுற்றுலா காரணங்களுக்காவோ அல்லது பிற காரணங்களுக்காகவோ நீலகிரி மாவட்டத்திற்குள் நுழைவது கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது பேரிடர் மேலாண்மை சட்டம் மற்றும் 144 தடைச் சட்டத்தின் கீழ் மிகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன் வாகனமும் பறிமுதல் செய்யப்படும். மேலும், பொதுமக்கள் வெளியே செல்லும் பொழுது, கட்டாயம் முகக்கவசம் அணியப்பட வேண்டும். கடைகளில் போதிய சமூக இடைவெளியைப் பின்பற்றி பொருட்கள் பெற்றுச் செல்ல வேண்டும். இதனை மீறுபவர்கள் மற்றும் கடை உரிமையாளர்களை பறக்கும் படையினைக் கொண்டு கண்காணிக்கப்பட்டு உரிய அபராதம் விதிக்கப்படும்.

மாவட்ட நிர்வாகம் எடுக்கும் அனைத்து நிகழ்வுகளுக்கும் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நீலகிரிமாவட்டம்.